# திருவில்லிபுத்தூர் பகுதியில் வளர்ச்சி திட்ட பணிகள்: கலெக்டர் ஜெயசீலன் ஆய்வு



**விருதுநகர், மார்ச் 16-**

விருதுநகர் மாவட்டம், திருவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் சிவகாசி மாநகராட்சிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து கலெக்டர் ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டத்தில், தமிழ்நாடு அரசின் மூலம் ஊரகம், நகராட்சி, பேரூராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள், நலத்திட்டங்கள், சேவைகள் முறையாகவும், தரமானதாகவும் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதை உறுதிசெய்யும் வகையில் கலெக்டர் அவர்கள் தொடர்ச்சியாக பல்வேறு கள ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, சிவகாசி மாநகராட்சி திருத்தங்கல் 4 ஆவது வார்டு எம்.ஜி.ஆர் காலனியில் ரூ.15 இலட்சம் மதிப்பில் புதிதாக கலையரங்கம் கட்டப்பட்டு வருவதையும்,

மேலும், திருத்தங்கல் ரயில் நிலையம் செல்லும் பாதையில் 17 ஆவது வார்டில் ரூ.10 இலட்சம் மதிப்பில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டு வருவதையும் கலெக்டர் முனைவர் வீ.ப.ஜெ ய சீ லன், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், திருத்தங்கல் கண்ணகி காலனியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்; ரூ.25 இலட்சம் மதிப்பில் சமுதாய கூடம் கட்டப்பட்டு வருவதையும், தொடர்ந்து, சிவகாசி மாநகராட்சியில், வார்டு எண் 37-ல் ரூ.40 இலட்சம் மதிப்பில் புதிதாக சமுதாயக்கூடம் கட்டப்பட்டு வருவதையும், வார்டு எண் 46-ல் மாரிமுத்து தெருவில் ரூ.23.50 இலட்சம் மதிப்பில் சுகாதார வளாகம் கட்டப்பட்டு வருவதையும்,

வெம் பக் கோட்டை முக்கு அருகில் ரூ.10.8 இலட்சம் மதிப்பில் பேருந்து நிறுத்தம் நிழற்குடை அமைக்கப்பட்டு வருவதையும் கலெக்டர் அவர்கள் கேட்டறிந்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து, திருத்தங்கல் செங்கமல நாச்சியார்புரம் ஊராட்சியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முதல்வர் மருந்தகத்தினை பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருந்துகளின் தரம், இருப்பு, விலை குறித்து கலெக்டர் நேரில் சென்று ஆய்வு செய்து கேட்டறிந்தார்.

பின்னர், திருவில்லிபுத்தூரில் கலைஞரின் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.13 கோடி மதிப்பில் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருவதையும், 15-வது நிதிக்குழு மானிய நிதியின் கீழ் ரூ.123 கோடி மதிப்பில் காய்கறி கழிவு மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வருவதை பார்வையிட்டு, அங்கு சேகரிக்கப்படும் திடக்கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து நுண் உரம் தயாரிக்கும் பணிகளை கலெக்டர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, மாநகராட்சி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, பொறியாளர்கள், உதவி பொறியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சுழி மாரியம்மன் கோவில் மாசி பொங்கல் விழா பக்தர்கள் தீச்சட்டி ஏந்தி நேர்த்திக்கடன்



**அருப்புக்கோட்டை, மார்ச் 16-**

திருச்சுழியில் மாரியம்மன் கோவிலில் வெகு விமர்சையாக நடைபெற்ற மாசி பொங்கல் திருவிழா; திருச்சுழி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த பக்தர்கள் பொங்கல் வைத்தும் அக்னி சட்டி ஏந்தியும் வழிபாடு.

விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் உள்ள ராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட பழமை வாய்ந்த அருள்மிகு மாரியம்மன் கோவில் மாசி பொங்கல் திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டு வருகிறது. இக்கோவில் திருவிழா கடந்த வாரம் வியாழன் அன்று இரவு கொடியேற்றத்துடன் துவங்கியது . இதனை அடுத்து நாள்தோறும் அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு விசேஷ பூஜைகள் நடைபெற்று வருகிறது இதனை தொடர்ந்து தினந்தோறும் சிறப்பு அலங்காரத்துடன் அம்மன் காலையும் இரவும் வெள்ளி ரிஷப வாகனம், மயில் வாகனம் என பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இந்நிலையில் பொங்கல் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அதிகாலை முதலே பக்தர்கள் அம்பாளுக்கு பொங்கலிட்டும் மாவிளக்கு ஏற்றியும் வழிபட்டனர். அம்மனுக்கு நேர்த்திக்கடனாக ஏராளமானோர் அக்னி சட்டி ஏந்தியும், 21 அடி நீள அலகு குத்தியும், பாதம் வைத்தும், கண்மலர் செலுத்தியும் வழிபட்டனர். இத்திருவிழாவில் திருச்சுழி மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்பாளை வழிபாடு செய்தனர்.

## திருமங்கலம் அருகே கரடிக்கலில்

# அடுக்குமாடி குடியிருப்பை பயன்பாட்டிற்கு கொண்டு வர பொதுமக்கள் கோரிக்கை



**திருமங்கலம், மார்ச் 16-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள கரடிக்கல் கிராமத்தில், தமிழக அரசின் நீர்நிலை புறம்போக்கு பகுதியில் வசித்திடும் ஏழை எளியோருக்கு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 840 வீடுகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பினை பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மதுரை கோட்ட நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சார்பில் திருமங்கலம் அருகேயுள்ள கரடிக்கல் கிராமத்தில் 840 குடியிருப்புகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடும் பணிகள் தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளது. நீர்நிலை புறம்போக்கு பகுதியில் வசித்திடும் ஏழை எளியோருக்கு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 840 வீடுகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் பொருளாதாரத்தில் நலிவடைந்த, ஆண்டு வருமானம் 25 ஆயிரம் ரூபாய்க்கு உட்பட்ட வீடு இல்லாதோர் விண்ணப்பிக்கலாம் என்று அண்மை யில் அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி 400 சதுரடி பரப்பளவு உள்ள குடியிருப்புக்கு மத்திய-மாநில அரசின் மானியம் போக மீதி ரூ.1 லட்சம் தொகையை பயனாளி செலுத்த வேண்டும் என்று கட்டணமும் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது.

இந்த குடியிருப்பில் அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்வதில் தமிழக அரசின் நீர்நிலை புறம்போக்கு பகுதியில் வசிப்போருக்கு முன்னுரிமை தரப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனிடையே கரடிக்கல் கிராமத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமான பணிகளில் பெரும்பாலானவை நிறைவடைந்து விட்ட நிலையில் அதனை பொது மக்கள் மற்றும் பயனாளிகளின் பயன்பாட்டிற்கு விரைவில் ஒதுக்கீடு செய்து ஒப்படைத்திட வேண்டும் என கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. எனவே கரடிக்கல் கிராமத்தில்,தமிழக அரசின் நீர்நிலை புறம்போக்கு பகுதியில் வசித்திடும் ஏழை எளியோருக்கென அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் 840 வீடுகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பின் இறுதி கட்ட பணிகளை விரைவில் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்திட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.

# நெட்ரிக்ஸ் 2கே25 – தேசிய அளவிலான தொழில்நுட்ப போட்டி ஏவிஜடி–ல் சிறப்பாக தொடங்கியது

**சென்னை, மார்ச் 16-**

ஆறுபடை வீடு இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஏவிஐடி)- விநாயகா மிஷின்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்-நிகர் நிலை பல்கலைக்கழகம், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை சார்பில் நெட்ரிக்ஸ் 2K25 எனும் இரண்டு நாள் தேசிய அளவிலான தொழில்நுட்ப போட்டி மார்ச் 13, 2025 அன்று வெகு விமரிசையாக தொடங்கியது. ஏ.ஐ.சி.டி.இ-இன் ஏஐ பார் ஆல் கொள்கையின் கீழ், மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை அனுபவிக்க மற்றும் செயல்படுத்தும் வாய்ப்பை வழங்குவதே இந்த போட்டியின் பிரதான நோக்கமாகும். தொடக்க விழாவில், டாக்டர் எஸ்.பாலகிருஷ்ணன், பேராசிரியர் & துறை தலைவர், ஏவிஐடி, வரவேற்பு உரையாற்றினார். அதன் பின், டாக்டர் ஜி.செல்வகுமார், முதல்வர், ஏவிஐடி, தலைமையுரை வழங்கி, தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும், மாணவர்கள் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

முதன்மை விருந்தினராக டாக்டர் சாய்நாராயணன் கோபாலகிருஷ்ணன், உலகளாவிய தொழில்நுட்ப இயக்குனர் எச்சிஎல்டெக், கலந்து கொண்டு, ஏஐ மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் கல்வி, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு துறைகளில் ஏற்படுத்தும் தாக்கங்களை விளக்கி, மாணவர்கள் தொழில்நுட்பத்தில் புத்தாக்கம் செய்யும் தேவை பற்றி பேசினார். நாட்டின் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி, அறிவு பரிமாற்றத்திற்கும், ஆரோக்கியமான போட்டிக்கும் வழிவகுத்தனர். டாக்டர் முத்துகுமரன் எம்.,பேராசிரியர், சிஎஸ்இ, ஏவிஐடி, நன்றிக்குறிப்பு உரையாற்றிய போது, போட்டியினை வெற்றிகரமாக நடத்த உதவிய அனைவருக்கும், குறிப்பாக ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ராஜேஷ், இணை பேராசிரியர், ஏவிஐடி, அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவித்தார்.நெட்ரிக்ஸ் 2கே25 போட்டி, மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி நிபுணர்களுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு தளமாக, ஏவிஐடி-இன் அர்ப்பணிப்பையும், எதிர்கால கல்வி மற்றும் தொழில் உலகிற்கு அளிக்கும் ஆதரவையும் பறைசாற்றுகிறது.

# விவசாயிகளுக்கு டிரோன் மூலம் மருந்து தெளிப்பது குறித்து பயிற்சி



**விருதுநகர், மார்ச் 16-**

விருதுநகர் மாவட்டத்திலுள்ள கோவிலாங்குளம் கிராமத்தில் நம்மாழ்வார் வேளாண் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாணவிகள் ஊரக வேளாண் அனுபவ பயிற்சி மூலம் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு ட்ரோன் மூலம் விவசாயத்திற்கு மருந்து தெளிப்பது பற்றிய விளக்கம் அளித்தும் மாதிரி செயல்முறை செயல்படுத்தி காட்டினர்.

ட்ரோன் என்பது ஆளில்லா வானூர்தி, ரிமோட் மூலம் இயக்கக்கூடியது.இதன் மூலம் குறைந்த நேரத்தில் அதிக பரப்பில் மருந்துகள் தெளிக்கப்படுகின்றன.பயிர் கண்காணிப்பு, வயல் மேப்பிங், பூச்சி கண்டறிதல்,

பயிர் தெளித்தல் மற்றும் துல்லியமான நீர்ப்பாசனம் போன்ற விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இன விவசாயிகளுக்கு விவசாயக் கல்லூரி மாணவிகள் விளக்கம் அளித்தனர்.

# மேலூர் துருவம் அமைப்பின் சார்பில் மகளிர் தின கருத்தரங்கம்



**மேலூர், மார்ச் 16-**

மேலூர் துருவம் அமைப்பின் சார்பில் மகளிர் தின கருத்தரங்கம் நடைபெற்றது.

மேலூரில் விதைகள் விருட்சமாகட்டும் - 06 துருவம் அமைப்பின் சார்பில் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி அன்பில் தொடங்கி ஆளுமை வரை என்ற தலைப்பில் பெண்களுக்கான சமுதாய கருத்தரங்கம் மேலூர் ஜாஸ் பள்ளியில் நடைபெற்றது. விஜயா பதிப்பகம் உரிமையாளர் வேலாயுதம் வரவேற்புரையாற்றினார். ஆவணப்பட இயக்குனர் கவிஞர் ரவிசுப்பிரமணியன் அறிமுகயுரை வழங்கினார். சமூக சேவகர் காமாஷி ஸ்வாமிநாதன், கவிஞர் எழுத்தாளர் இன்பா சுப்ரமணியன், மருத்துவர் எழுத்தாளர் சசித்ரா தாமோதரன், பத்திரிகை ஆசிரியர் ரோஜா வள்ளிக்கண்ணு ஆகியோர் விழாவில் பெண்கள் சமூகத்தில் எவ்வாறு வளர வேண்டும் என்றும், அவர்களது திறமைகளை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்றும், குடும்பத்தை எவ்வாறு நல்வழி படுத்த வேண்டும் என்று பெண்களுக்கு அறிவுரைகளை வழங்கினர்.

விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் டைல்ஸ் பார்க் நிறுவனர் முரளி கௌரவித்தார். மேலூர் ஜெய்வீர் சிறப்பு பள்ளியை சேர்ந்த மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். பள்ளியின் வளர்ச்சிக்காக துருவம் சார்பில் ரூ. 50,000 க்கான காசோலையை ஜெய்வீர் நிர்வாகி சிந்துவிடம் துருவம் அமைப்பினர் வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர். துருவம் அமைப்பின் நிர்வாகியும், தொழில்முனைவோர் ப்ரீத்தி முரளி நன்றி கூறினார்.

# சிறப்பு மிக்க தமிழக அரசின் பட்ஜெட் தொழில் வர்த்தக சங்கத்தினர் பாராட்டு

**ராஜபாளையம், மார்ச் 16-**

சிறப்பு மிக்க தமிழக அரசின் பட்ஜெட் தொழில் வர்த்தக சங்கத்தினர் பாராட்டு தெரிவித்தது.

தமிழகத்தில் ஒன்பது மாவட்டங்களில் புதிய தொழில் பேட்டைகள் அமைக்கப் படுவதை வரவேற்கிறோம். வரும் நிதியாண்டில் பத்து லட்சம் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு 2.50 லட்சம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்கப் படுவது வரவேற்கத்தக்கது. தானியங்கி முறையில் கம்ப்யூட்டரில் கையாளக் கூடிய துணி வெட்டும் இயந்திர நிறுவனங்களை அமைக்க 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளதால் திருப்பூர், விருதுநகர், சென்னை போன்ற ஜவுளி நகரங்களுக்கு பயனளிக்கும் என்பதால் வரவேற்கிறோம்.

ராமேஸ்வரத்தில் புதிய விமான நிலையம் அமைப்பதை வரவேற்கிறோம். செமி கண்டக்டர் ஆலை அமைக்கப் பட இருப்பதை வரவேற்கிறோம். மகளிரை தொழில் முனைவோராக உயர்த்திடும் திட்டத்தின் கீழ் வங்கிக் கடன் பெறவும், தொழில் துவங்க பயிற்சிகள் வழங்குவதையும் வரவேற்கிறோம். மதுரை - தூத்துக்குடி தொழில் வழித் தடத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யாதது வருத்தமளிக்கிறது. மொத்தத்தில் தமிழக அரசின் இந்த பட்ஜெட் சிறப்பாக உள்ளது என்று ராஜபாளையம் தொழில் வர்த்தக சங்கம் பாராட்டுகிறது.

# திருமங்கலத்தில் இலக்கியப் பேரவை சார்பில் மகளிர் தின விழா



**திருமங்கலம், மார்ச் 16-**

திருமங்கலம் இலக்கியப் பேரவை சார்பில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியைகள் பங்கேற்று பெண்ணின்று அமையாது உலகு என்ற தலைப்பில் பேசினர்.

திருமங்கலம் இலக்கியப் பேரவையின் 329-வது கூட்டம் லிங்கா மெட்ரிகுலேசன் பள்ளி வளாகத்தில் மகளிர் தின விழாவாக நேற்று மாலை நடைபெற்றது.இக்கூட்டத்திற்கு இலக்கியப் பேரவை தலைவர் பெ. பூலோக சுந்தர விஜயன் தலைமை வகித்தார். திருமங்கலம் அன்னை வசந்தா டிரஸ்ட் தலைவர்,சமூக சேவகி ப.அமுதவள்ளி பழனி முருகன் முன்னிலை வகித்தார்.

இலக்கியப்பேரவை செயலாளர் சு.சங்கரன் வரவேற்புரை யாற்றினார்.அறிவோம் வரலாறு என்ற தலைப்பில் பேரவை பொருளாளர் அ.தமிழ்ச்செல்வன் பேசினார்.குறளும் பொருளும் பேரவை துணைச்செயலாளர் மா.ஜெயபால கிருஷ்ணன் கலந்து கொண்டு பேசினர்.

செயற்குழு உறுப்பினர் இலக்கியச் சுடர் குரு.ஜெயச்சந்திரன் வாழ்த்துரை வழங்கினார். இதனை தொடர்ந்து நடைபெற்ற மகளிர் தின விழா நிகழ்வினில் டாக்டர் இராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியைகள் பரிமளா, க.ரோஜா,ஆ.ரா.வளர்மதி,மு.தாமரைச்செல்வி,ச.சிந்தியா,சீ.விஜயலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பெண்ணின்றி அமையாது உலகு என்ற தலைப்பில் சிறப்புரை யாற்றினார்கள். இதனை தொடர்ந்து மாநில நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியைகள் மற்றும் சாதனை படைத்த மகளிருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்கப்பட்டது. முடிவில் செயற்குழு உறுப்பினர் கண்ணன் நன்றி கூறினார்.

# மதுரையில் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம்



**மதுரை, மார்ச் 16-**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுக் கூட்டம் மதுரை பூங்கா முருகன் திருக்கோயில் திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இம்மத்திய செயற்குழு கூட்டத்தினை சங்கத்தின் மாநில தலைவர் தெ.வாசுகி, மாநில பொதுச் செயலாளர் சி.சுரேஷ் மற்றும் மாநில பொருளாளர் பாலமுருகன், மாநில துணைத் தலைவர் மதுசூதன ராயர் ஆகியோர் முன்னின்று நடத்தினர்.

இக்கூட்டத்தில் உரிய காலத்திற்கும் பதவி உயர்வுகள் மற்றும் பணி மாறுதல்கள் வழங்க வேண்டும்.

கிராமப்புற திருக்கோயில் திருப்பணி மற்றும் ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவது, ஜிஎஸ்டி வரி பிடித்தம் செய்வது ஆகியவற்றை தவிர்த்து திருப்பணிகள் மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் எனவும், துறையின் இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர விடுமுறை தினங்களில் சீராய்வுக் கூட்டங்கள் நடத்துவதையும் அடிக்கடி சீராய்வுக் கூட்டங்கள் நடத்துவதையும் தவிர்க்க வேண்டும்.

துறையின் ஆய்வாளர்களுக்கு அலுவலகங்கள் கட்டித் தர வேண்டும் அலுவலக உதவியாளர்கள் நியமனம் செய்து தர வேண்டும் என்பன உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கை தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த கோரிக்கை தீர்மானங்களை ஆணையர் மற்றும் அறநிலை துறை அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தர வேண்டும் என மத்திய செயற்குழுவில் வலியுறுத்தப்பட்டது.

இந்த மத்திய செயற்குழு கூட்டத்தில் அரசு ஊழியர் சங்க மாநில செயலாளர் திருநீதி ராஜா மற்றும் மதுரை மாவட்ட அரசு ஊழியர் சங்க செயலாளர் சந்திர போஸ் உள்ளிட்ட தோழமை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

## முதுகுளத்தூர் அருகே

# மழைநீரை நெடுஞ்சாலை துறையினர் அகற்றினர்



**முதுகுளத்தூர், மார்ச் 16-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்மழை பெய்து வந்த நிலையில் முதுகுளத்தூர் தாலுகா தேரிருவேலி-சிக்கல் மாநில நெடுஞ்சாலையில் மழைநீர் தேங்கி நின்றது. இதனை மாநில நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் முருகன் உத்தரவுபடி முதுகுளத்தூர் உதவி பொறியாளர் மகேஸ்வரன் மேற்பார்வையில் நெடுஞ்சாலைத்துறை ஊழியர்கள் சாலையோரம் தேங்கி நின்ற மழைநீரை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அகற்றினர்.




**நோவா ஐவிஎஃப் கருத்தரிப்பு மையம், மதுரை மற்றும் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் நுண்ணுயிரியல் மற்றும் ஆய்வக தொழில்நுட்ப துறை உடன் இணைந்து கருவுறாமை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு வாக்கத்தான் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. இந்த வாக்கத்தான் நிகழ்ச்சியை மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் காவல் ஆணையர் சிவசக்தி, நோவா ஐவிஎஃப் கருத்தரிப்பு மையத்தின், கருத்தரிப்பு மருத்துவர் டாக்டர் சிந்தியா ஆகியோர் கலந்து கொண்டனர்.**

## தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய பகுதியில் வளர்ச்சி பணிகள் குறித்து கலெக்டர் ரஞ்ஜீத் சிங் நேரில் ஆய்வு



**தேனி, மார்ச் 16-**

தேனி மாவட்டம். போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொட்டக்குடி ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்ல திட்டப்பணிகள், உண்டு உறைவிடப் பள்ளி, அங்கன்வாடி மையம், துணை சுகாதார நிலையம், மற்றும் குரங்கனி பகுதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் நேற்று (15.03.2025) ஆய்வு மேற்கொண்டார்.

கொட்டக்குடி ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தலா ரூ.3.10 இலட்சம் மதிப்பீட்டில் 32 புதிய வீடுகள் கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கொட்டக்குடி பகுதியில் உள்ள உண்டு உறைவிட பள்ளியில்வருகை பதிவேடு உள்ளிட்ட பிற பதிவேடுகள் குறித்தும், மாணவர்களின் கற்றல் திறன் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார். மேலும், பள்ளி பாதுகாவலரிடம் பதிவேடுகளை முறையாக பராமரிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் எடை மற்றும் உயரம் அளவீடு செய்யப்பட்டு முறையாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா, குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு, சமையலுக்கு பயன்படுத்தும் பொருட்களின் தரம் மற்றும் அங்கன்வாடி மையத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், கொட்டக்குடி துணை சுகாதார நிலையம் மற்றும் குரங்கனி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, உள்நோயாளிகள் பிரிவில் உள்ள படுக்கை வசதி, புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற வருகை தந்த பொதுமக்களின் எண்ணிக்கை, சிகிச்சை அளிக்கப்படும் விதம், மருந்து, மாத்திரைகளின் இருப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் மற்றும் வருகை பதிவேடு, கர்ப்பிணி தாய்மார்கள் பதிவேடு மற்றும் பிறபதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருப்பதிவாசகன், திருமதி தனலெட்சுமி, வட்டாட்சியர் சந்திரசேகரன் உள்ளிட்ட அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

## வேளாண் பட்ஜெட்டில் கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு அறிவிப்புகள்

**சென்னை, மார்ச் 16-**

கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை வழங்க 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்து உரையாற்றி வருகிறார்.

பேரவையில் பேசிய அவர்,

“சர்க்கரை ஆலைகளுக்கு 2024-2025 அரவைப்பருவத்திற்கு கரும்பு வழங்கிய உழவர்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

2024 - 2025 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்குப் பதிவு செய்து கரும்பு வழங்கிய தகுதியுள்ள உழவர்களுக்கு, டன் ஒன்றுக்கு 349 ரூபாய், சிறப்பு ஊக்கத்தொகையாக உயர்த்தி வழங்கப்படும். இதனால் கரும்புக்கு டன் ஒன்றிற்கு 3,500 ரூபாய் வழங்கப்பட்டு, சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் கரும்பு உழவர்கள் பயன்பெறுவர். இதற்கென 297 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

அதிக சர்க்கரைக் கட்டுமானம், பூச்சி, நோய்த் தாக்குதலுக்கு எதிர்ப்புப் பண்புகளைக் கொண்ட புதிய கரும்பு ரகங்களை உழவர்கள் அதிக பரப்பில் சாகுபடி செய்திடவும். சாகுபடி செலவைக் குறைக்கும் விதமாக கரும்பு விதைக்கரணைகள். நாற்றுகள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற அகலப்பார் நடவு முறை. நுண்ணூட்ட உரக்கலவை, தோகை தூளாக்குதல், நிலப்போர்வை அமைத்தல் போன்ற இனங்களை கரும்பு உழவர்களுக்கு மானிய விலையில் வழங்கவும் மத்திய, மாநில அரசு நிதியிலிருந்து 10 கோடியே 53 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்” என்று அறிவித்தார்.



ஸ்ரீவில்லிபுத்தூர் இருப்பு பாதை காவல் நிலையத்தின் சார்பில் ரயில் நிலையம் நடைமேடையில் ரயில் நிலையம் மற்றும் ரயில் பயணத்தின் போது பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு குறித்து பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் சமாதானம் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் துரைசாமி மற்றும் காவலர்கள் தலைமையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

## 3,000 ஏக்கரில் மதுரை மல்லிகைக்கென சிறப்புத் திட்டம்: அமைச்சர் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 16-**

மதுரை மல்லிக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஏக்கரில் மல்லிகை செடி வளர்க்க ஊக்குவிக்கப்படும் என அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

2025-26 ஆம் நிதியாண்டுக்கான வேளாண் நிதிநிலையை வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் நேற்று (மார்ச் 15) காலை தாக்கல் செய்து உரையாற்றினார்.

பேரவையில் பேசிய அவர்,

“தினசரி வருமானம் ஈட்டுவதற்கு மலர்கள் சாகுபடியை ஊக்குவிக்க ரூ. 8.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில், மதுரை மல்லிக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ் 3,000 ஏக்கரில் மல்லிகைச் செடி வளர்க்க ஊக்குவிக்கப்படும். இதற்காக ரூ. 1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ரோஜா மலர் சாகுபடியை ஊக்குவிக்க ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

2,500 ஏக்கரில் உள்ள சீமை கருவேல மரங்களை அகற்றி மிளகாய் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். விருதுநகர், இராமநாதபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

பாரம்பரிய காய்கறி சாகுபடியை ஊக்குவிக்க, ரூ. 2.40 கோடியில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். வெங்காயத்தை சேமித்து வைத்து விற்பனை செய்ய கிடங்கு அமைப்பதற்கு மானியம் வழங்க ரூ. 18 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

காய்கறிகள் விதை தொகுப்பு 15 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும். பழச் செடி தொகுப்பு 9 லட்சம் குடும்பங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும். பயிர் வகை விதைத் தொகுப்பு 1 லட்சம் இல்லங்களுக்கு 75% மானியத்தில் வழங்கப்படும்.

புரதச்சத்து நிறைந்த காளான் உற்பத்தியை ஊக்குவிக்க ஊரக பகுதியில் 5 காளான் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படும்” என்றார்.

## கிருஷ்ணன் கோயில் கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில்நுட்பம், மேலாண்மை சந்திப்பு நிகழ்ச்சி



**விருதுநகர், மார்ச் 16-**

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் பொறியியல், மேலாண்மை, வேளாண்மை, கட்டிடக்கலை, சட்டம், கலை மற்றும் அறிவியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக 2 நாட்கள் டெக்னோ மேலாண்மை தேசிய சந்திப்பு யூபோரியா 25 என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில், வேந்தர் முனைவர் ஸ்ரீதரன் தலைமையில் துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த் முன்னிலையில், 87-க்கும் மேற்பட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மொத்தம் 18 லட்சம் மதிப்பில் ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

முன்னதாக துணைவேந்தர் நாராயணன் மற்றும் பதிவாளர் வாசுதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஜே.பிரதீப் கந்தசாமி அனைவரையும் வரவேற்றார்.

பெங்களூரு, ஐ.பி.எம். நிறுவன டெலிவரி தலைவர் விகாஷ்டன் சுரேஷ், 24 மணிநேர தொடர் ஹேக்கத்தான் போட்டிகளைத் துவக்கி வைத்து கண்காணித்து, சிறப்பாக செயல்பட்ட மாணவர்களுக்கு கம்பெனி அப்ரெண்டிஷிப்பிற்கான அனுமதியை அறிவித்துப் பேசினார். நாடு முழுவதும் உள்ள பிற கல்வி நிறுவனங்களிலிருந்து 3 ஆயிரம் மாணவர்களும், கலசலிங்கம் பல்கலைகழகத்திலிருந்து 4 ஆயிரம் மாணவர்களும் பங்கேற்றனர்.

டீன்கள் பி.சிவகுமார் மற்றும் என்.சிவகுமார், பேராசிரியர் எஸ்.கபிலன் ஆகியோர் இயக்குநர்களுடன் ஒருங்கிணைந்து அனைத்துப் பள்ளிகளின் டீன்கள், பேராசிரியர்கள் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். முடிவில் பேராசிரியர் பென்னிலோ பெர்னாண்டஸ் நன்றி கூறினார்.

## புதிய அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள்: தமிழ்நாடு வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 16-**

தமிழகத்தில் ஏழு இடங்களில் புதிய அரசு விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்த ரூ.15.05 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று வேளாண் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழக வேளாண் பட்ஜெட் பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. வேளாண் பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பில்,இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் வருவாய் இழப்புக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ரூ.841 கோடியில் செயல்படுத்தப்படும்.

உழவர்களின் நிலங்களில் விதைப்பண்ணைகள் அமைத்து விதைகள் கொள்முதல் செய்யப்படும். இதற்கு ரூ.250 கோடி ஒதுக்கீடு. உயர் விளைச்சல் தரக்கூடிய இரகங்களின் சான்று விதைகள் 39,500 மெட்ரிக் டன் அளவில் விநியோகம். நெற்பயிருக்கு மாற்றாக குறைந்த நீர்த் தேவையுள்ள பயிர்களின் சாகுபடியை ஊக்குவிக்க, மாற்றுப்பயிர் சாகுபடித் திட்டம் ரூ.12.50 கோடியில் கொண்டு வரப்படும்.

ஆதி திராவிட பழங்குடியின வகுப்பைச் சார்ந்த சிறு, குறு உழவர்களின் பொருளாதாரச் சுமையினைக் குறைக்கும் திட்டம் ரூ.21 கோடியில் கொண்டு வரப்படும். இயற்கை வேளாண்மையைப் பரவலாக்கம் செய்திட இயற்கை வேளாண்மைத் திட்டங்கள் ரூ.12 கோடியில் உருவாக்கப்படும். உயிர்ம விவசாயிகளுக்கு இலவச உயிர்ம வாய்ப்புச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் உயிர்ம விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்.

உயிர்ம விளைபொருட்களில் எஞ்சிய நச்சு மதிப்பீடு பரிசோதனைக் கட்டணத்திற்கு உழவர்களுக்கு முழு மானியம். சிறுதானியப் பயிர்களின் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறனை அதிகரிக்க தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் கொண்டு வரப்படும். உணவு எண்ணெய்த் தேவையில் தன்னிறைவு அடைய எண்ணெய் வித்துகள் இயக்கம் ஏற்படுத்தப்படும்.

மக்காச்சோள சாகுபடிப் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க “மக்காச்சோள உற்பத்தி மேம்பாட்டுத் திட்டம்” கொண்டு வரப்படும். இதற்காக ரூ.40.27 கோடி ஒதுக்கீடு. தமிழ்நாட்டில் உள்ள 2338 கிராம ஊராட்சிகளில் “கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் மூலம் 3,000 மெட்ரிக் டன் விதைகள் சுத்திகரிக்கப்பட்டுக் கொள்முதல். பருத்தியின் உற்பத்தியை அதிகரித்திட “பருத்தி உற்பத்திப் பெருக்குத் திட்டம்” அறிமுகப்படுத்தப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## நிலக்கோட்டை அரசு மகளிர் கலை கல்லூரியில் 20-வது பட்டமளிப்பு விழா

**வத்தலகுண்டு, மார்ச் 16-**

நிதிண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை குளத்துப்பட்டியில் அமைந்துள்ள, அரசு மகளிர் கலைக் கல்லூரியின் 20-வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. காந்திகிராமிய பல்கலைக்கழக துணை வேந்தர் பஞ்சநாதன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் கீதா வரவேற்றார். விழாவில் 431 இளங்கலை மாணவிகளுக்கும், 149 முதுகலை மாணவிகளுக்கும், 4 ஆராய்ச்சி மாணவிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன. பல்கலைக்கழக அளவில் 7 மாணவிகள் பதக்கங்களை வென்றனர்.



துணைவேந்தர் பஞ்சநாதன் தனது உரையில், “இன்றைய இந்தியாவில் 141 கோடி மக்கள் உள்ளனர். அவர்களில் 12-ம் வகுப்பு முடித்தவர்களில் 30 சதவீதம் பேர் மட்டுமே உயர்கல்வி படிக்கின்றனர். 70 சதவீதம் பேர் படிக்கவில்லை. அரசு கல்லூரிகளில் படித்த பலரும் சாதனை படைத்துள்ளனர். அரசு பள்ளியிலும், கல்லூரியிலும் படித்த நான், தமிழ் வழியில் படித்து இரண்டு பல்கலைக்கழகங்களுக்கு துணைவேந்தராக பணியாற்றி வருகிறேன். அப்துல் கலாம் ஐயா, உங்கள் கல்லூரி முதல்வர் ஆகியோரும் அரசு கல்லூரிகளில் படித்தவர்கள்தான். சாதனை புரிய மனது இருந்தால் போதும். உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்ட கல்கி, படுத்த படுக்கையாக பொன்னியின் செல்வன் வரலாற்று நாவலை எழுதினார். வாழ்க்கையில் முன்னேற நாம் படித்த பள்ளியோ, வாழ்ந்த இடமோ தடையாக இருக்காது” என்று பேசினார்.

விழாவில் ஆங்கிலத் துறை தலைவர் பேராசிரியர் லதா, இயற்பியல் துறை தலைவர் பேராசிரியர் சுமதி, வீட்டு அறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கவிதா மகேஷ்வரி, தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் பாண்டீஸ்வரி, பொருளாதார துறைத்தலைவர் பேராசிரியர் முருகவேல், வணிகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் சுரேஷ்குமார், வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் செந்தில்குமார், புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் உமா மகேஷ்வரி, வேதியியல் துறைத்தலைவர் பேராசிரியர் செல்வம், கணினி அறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் இக்பால் ஆகியோர் பட்டம் பெற்ற மாணவிகளை அறிமுகம் செய்தனர்.

இணை பேராசிரியர் சின்னச்சாமி, உதவி பேராசிரியர்கள் தீலிபன், மாயாண்டி, கார்த்திகேயன், சங்கரக்குமார் மற்றும் பேராசிரியர்கள், மாணவிகளின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

## க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியல் 26வது இடம் பிடித்த சிமாட்ஸ் பல்கலைக்கழகம்

**சென்னை, மார்ச் 16-**

சவீதா மருத்துவ மற்றும் தொழில்நுட்ப அறிவியல் நிறுவனம் (சிமாட்ஸ்), பல் மருத்துவ பாடத்தின் அடிப்படையில் க்யூஎஸ் உலக பல்கலைக்கழக தரவரிசையில் உலகளவில் 26வது இடத்தைப் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.உலகளாவிய முதல் 30 இடங்களை பிடித்த கல்வி நிறுவனங்களில் இந்தியாவைச் சேர்ந்த 4 கல்வி நிறுவனங்களில் ஒன்றாக சிமாட்ஸ் இடம் பிடித்துள்ளது. பல் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் தனது சிறப்பான செயல்பாட்டை சிமாட்ஸ் மீண்டும் நிரூபித்துள்ளது.பாட வாரியான க்யூஎஸ் உலகப் பல்கலைக்கழக தரவரிசை பட்டியல், பல்கலைக்கழகங்களின் கல்வித் திறனை வெளிப்படுத்தும் ஒன்றாகும். இது உலகெங்கிலும் உள்ள ஆயிரக்கணக்கான பல்கலைக்கழகங்களை அவற்றின் கல்வி நற்பெயர், ஆராய்ச்சி, நிறுவனத் தலைவர்களின் கருத்து மற்றும் ஆசிரியர்களின் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பிடுகிறது.

இது குறித்து சிமாட்ஸ் வேந்தர் டாக்டர் என்.எம்.வீரையன் கூறுகையில், உலக அரங்கில் இந்தியாவின் உயர் தரவரிசை கல்வி நிறுவனங்களில் ஒன்றாக எங்கள் பல்கலைக்கழகம் இடம் பெற்றிருப்பது என்பது நமக்கு கிடைத்த பெருமையாகும். உலக அளவில் முதல் 30 இடங்களில் இந்தியாவிலிருந்து இடம்பெற்ற ஒரே பல் மருத்துவ நிறுவனம் என்பதற்கு முக்கிய காரணம், கல்வி மற்றும் மருத்துவ துறையில் எங்களின் விடாமுயற்சியை எடுத்துக்காட்டுகிறது. இந்த தரவரிசை என்பது, அதிநவீன ஆராய்ச்சி, உலகத்தரம் வாய்ந்த கல்வி மற்றும் சிறந்த நோயாளி பராமரிப்பு ஆகியவற்றை பாராட்டும் விதமாக அமைந்துள்ளது என்று கூறினார்.

### ஆவணம் காணவில்லை

இதன் மூலம் சகலமானவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரரான தேனி மாவட்டம், தேனி வட்டம், பொம்மையகவுன்டன்பட்டி, வாட்டர் டேங்க் பின்புறம், 2H/5A, வார்டு எண்.3 என்ற முகவரியில் வசித்து வரும் ஜீவா அவர்களின் மனைவி திருமதி.செரின் ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட எனக்கு பாத்தியமான மூலக்கிரையபத்திரமான கிரைய ஆவண எண். 2729/1978 - நிர் ஆவணம் கடந்த 15.02.2025-ம் தேதி தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து திரும்பும் போது தொலைந்துவிட்டது. இது சம்மந்தமாக கடந்த 15.03.2025-ம் தேதி தேனி காவல்நிலையத்திற்கு இணையதளம் மூலம் புகார் செய்துள்ளேன். மேற்படி ஆவணத்தினை யாரேனும் எடுத்தாலோ, அல்லது கண்டுப்பிடித்தாலோ,எனது கட்சிக்காரருக்கோ அல்லது கீழ்கண்ட எங்கள் அலுவலக முகவரிக்கோ இந்த அறிவிப்பு கண்ட 7 தினங்களுக்குள், தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. P.மாதவன் B.A., L.L.B., வழக்கறிஞர்,
ஸ்ரீ சாய் ராம் லா அசோசியேட்ஸ்.
No.1287. K.N.V, காம்பளக்ஸ், எக்விடாஸ் பேங்க் முதல் தளம்,
பெரியகுளம் ரோடு, தேனி. செல்: 9842181602.

சார்பு நீதிமன்றம் பரமக்குடி
MACOP.NO: 46/2023
அசோக்குமார் (38/2025)
த/பெ வேலு
கீழநெட்டூர், கீழநெட்டூர் அஞ்சல்,
இளையான்குடி வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
---- மனுதார்
--- எதிர் ---
ராஜசேகர் (57/2025)
த/பெ தெட்சிணாமூர்த்தி
ஆர். இ. நகர்,9-வது தெரு,
சென்னை -116
--- 1-ம் எதிர் மனுதார்
அறிவிப்பு
இந்த நம்பர் வழக்கின் நீதிமன்ற அழைப்பாணை 1-ஆம் எதிர்மனுதாரின் முகவரிக்கு அனுப்பியதில் சார்பாகாத காரணத்தால் விளம்பர நாளிதழில் அறிவிப்புவெளியாகிஉத்தரவானதன்படி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. மனுதார் தொடர்ந்துள்ள இந்த வழக்கில் ஷை 1-ம் எதிர்மனுதாரருக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் எதிர்வரும் 04.04.2025-ஆம் தேதி காலை 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்குரைஞர் மூலமோ ஆஜராகித் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. அவ்விதம் மறுப்புத் தெரிவிக்காத பட்சம் மறுதரப்பிலா நிலையில் நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் என்பதை ஷை 1-ஆம் எதிர் மனுதாருக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
சி. பசுமலை, அறி. இள. ச. இள
வழக்குரைஞர்,
பரமக்குடி.

திண்டுக்கல் அ.டி.மு.கோர்ட்டு
திண்டுக்கல்
IA No. 218/2023
IA No. 1703 / 2018
OS No. 14/2015
திரு.A.சேசுராஜ் மற்றும் ஒருவர்
..மனுதார்கள்/
2,3எதிர்மனுதார்கள்/
2,3 பிரதிவாதிகள்
திரு. C. அமலோர்பவமேரி
w/o சின்னப்பன்
வள்ளிப்பட்டி, முள்ளிப்பாடி கிராமம்,
திண்டுக்கல் மேற்கு தாலுகா,
.......6ம் எதிர்மனுதார்/
6ம் எதிர்மனுதார்/6ம் பிரதிவாதி
பொது அறிவிப்பு
மேற்படி நிர் வழக்கில், ஷை 6ம் எதிர்மனுதார்/ 6ம் எதிர்மனுதார் /6ம் பிரதிவாதி ஷை நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக 28.03.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை தேதியில் மேற்படி 6ம் எதிர்மனுதார்/6ம் எதிர்மனுதார் /6ம் பிரதிவாதி நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் மேற்படி வழக்கு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
G.ILAMPOORANAN,
B.A., B.L.,
Advocate,
DINDIGUL.
Cell: 93679 14910, 9597505910

திண்டுக்கல் கூடுதல் சார்பு
நீதிமன்றம், திண்டுக்கல்
O.S.No. 90/2023
கனரா வங்கி, ஸ்ரீராமபுரம் அதன்
கிளை மேலாளர் மூலம்.
.... வாதி
1.K. வேல்முருகன்
s/o V. கருப்புசாமி
19A, சக்கரையார் தெரு.
வெள்ளமடத்துப்பட்டி அருகில்,
ஸ்ரீராமபுரம் அஞ்சல், திண்டுக்கல்
மேற்கு தாலுகா
2. V. கருப்புசாமி
s/o வடமலைக்கவுண்டர்
மேற்படி விலாசம்.
...... பிரதிவாதிகள்
பொது அறிவிப்பு
மேற்படி நிர் வழக்கில், ஷை பிரதிவாதிகள் ஷை நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக 05.04.2025ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. ஷை தேதியில் மேற்படி பிரதிவாதிகள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படிவழக்குஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்ப டும் என்பதை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது.
G.ILAMPOORANAN,
B.A., B.L.,
Advocate,DINDIGUL.
Cell: 93679 14910,
9597505910.

### வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம், தேனி

ந.க.எண்: 51/2025 நாள் 12.03.2025

**வருடாந்திர ஒப்பந்தப்புள்ளி அழைப்பு விளம்பரம்**

தேனி மாவட்டம், வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சிக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு பேரூராட்சி பகுதிகளில் குடிநீர். மின்மோட்டார். கேட்டு வால்வு மற்றும் இதர பழுது பணி, எழுது பொருட்கள் சப்ளை, டோனர் ரிபில் மற்றும் கணினி பிரிண்டர் பழுது. புதிய டோனர் விநியோகம் பொது சுகாதார பணி (திடக்கழிவு மேலாண்மை) மேற்கொள்ள, டெங்கு கொசு புழு ஒழிப்பு பணி மேற்கொள்ள மற்றும் பேரூராட்சியில் உள்ள அலுவலக பணிகள், குடிநீர் பணிகள். மின் பணிகள், தட்டச்சு பணிகள் மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு 27.03.2025 தேதி வியாழன் கிழமை மாலை 3.00 மணிவரை வரவேற்கப்படுகின்றன. வரப்பெறும் ஒப்பந்தப்புள்ளிகள் வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களாலோ அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற அலுவலர்களாலோ பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் கீழக்கண்ட விபரப்படி ஒப்பந்த படிவக் கட்டணத்தை 27.03.2025 தேதி வியாழன் கிழமை மாலை 3.00 மணிக்குள் ரொக்கமாக செலுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வருமானவரி, பொதுசேவைவரி பதிவு சான்று, பொருட்களின் தரச்சான்று மற்றும் வினியோகஸ்தர் / விற்பனையாளருக்கான சான்றுடன் விண்ணப்பித்து ஒப்பந்தப்படிவம் பெற்றுக் கொள்ளலாம். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 27.03.2025 தேதி வியாழன் கிழமை மாலை 3.30 மணிக்கு ஆஜராகியுள்ள ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் பொழுது அதற்குரிய டேவணித் தொகை கட்டிய ரசீதும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். டேவணி ரசீது இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதர நிபந்தனைகள் மற்றும் விவரங்களை அலுவலக நேரங்களில் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் கேட்டுக் தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் | ஒப்பந்தப்புள்ளி படிவக் கட்டணம் | டேவணித் தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | பொதுசுகாதாரம் வீடு வீடாக சென்று குப்பைகள் தரம் பிரித்து வாங்குதல் மற்றும் வளமீட்பு பூங்காவில் உரம் தயாரித்தல் பணிகள் செய்தலுக்கு பணியாளர்கள் வழங்குதல் ஒரு நபருக்கு (திடக்கழிவு மேலாண்மை) | 500/- | 1000/- |
| 2. | டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் வழங்குதல் ஒரு நபருக்கு | 500/- | 1000/- |
| 3. | வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி பகுதிகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் வீடுகள் மற்றும் தெரு குழாய்களுக்கு குடிநீர் விநியோகம் செய்தல். தெருவிளக்குகள் மற்றும் அனைத்து மின் பணிகள் பழுது மற்றும் பொருத்துதல் பணிகள், அலுவலக பாதுகாவலர். ஓட்டுநர். துப்புரவு பணி மேற்பார்வையாளர், கணினி மூலம் வரிவசூல் செய்தல் பணிகள் மற்றும் பிறப்பு / இறப்பு கணினியில் பதிவு செய்தல் பணிகள் மேற்கொள்ள பணியாளர்கள் வழங்குதல் ஒரு நபருக்கு | 500/- | 1000/- |
| 4. | குடிநீர் பராமரிப்பு (பைப்லைன், கேட்வால்வு, பொதுக்குழாய் மற்றும் மின்மோட்டார் பழுது பணி செய்தல் | 1000/- | 5000/- |
| 5. | எழுது பொருட்கள் சப்ளை செய்தல் | 500/- | 1000/- |
| 6. | டோனர் ரீபில் & கணினி பழுது பிரிண்டர் பழுது சரிசெய்தல் மற்றும் புதிய டோனர் விநியோகம் செய்தல் | 500/- | 1000/- |
| 7. | பேரூராட்சி பகுதியில் ஜே.சி.பி மற்றும் கிட்டாச்சி இயந்திரம் மூலம் பணிகள் செய்தல் | 500/- | 1000/- |

ச.கீதாசசி
சேர்மன்
வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி
தேனி மாவட்டம்

வெ.கணேசன்
செயல் அலுவலர்
வீரபாண்டி தேர்வு நிலை பேரூராட்சி
தேனி மாவட்டம்

வெ.ஆ.எண்: 69/25/செ.ம.தொ.அ/தேனி/நாள்: 15.03.2025

